முதலாவது
இதழ்
2003



# பனுவல்

சமூக
பண்பாட்டு
விசாரணை

# பனுவல்

சமூக
பண்பாட்டு
விசாரணை

சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு
கொழும்பு.

# உள்ளடக்கம்

நுழைவாயில்

முன்னுரை

பனுவல் ஆசிரியர் குழு

**பனுவல் - பண்பாட்டு ரீதியான வெளிகள்**

அடையாளத்தின் கட்டமைப்பு முறைகள்
அரசியல், நடை, குழப்பம்
-சசங்க பெரேரா

'வர்த்தகர்களின் கடவுளாக முருகக் கடவுள்
'(கதரகம தெய்யோ)' - சிங்கள பௌத்த வர்த்தகர்களின் உடல்மொழி
-டெஸ்மன்ட் மல்லிகாரச்சி

புராதன காலத்தில் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையில் நிலவிய கலாசார மற்றும் வணிக தொடர்புகள் பற்றிய புதிய சான்றுகள்
-ஒஸ்மட் போபெ ஆரச்சி

குடும்பத்தின் பாணி: இலங்கையில் வன்முறையும் கலையும் தொடர்பான ஓர் ஆய்வு
-ஷெரன் பெல்

**பனுவல் - கேட்பாடு ரீதியான கதையாடல்கள்**

மொழிக்குறியின் இயல்பு
-வெடினன் டிசசூர்

**பனுவல் - நூல் திறனாய்வு**

இலங்கைத்தமிழர் தேசவழமைகளும், சமூகவழமைகளும்
(சி. பத்மநாதன்)
-கே.ரி.கணேசலிங்கம்

தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும்
(பரமு புஸ்பரட்ணம்)
-பா.அகிலன்


**கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர் விபரம்**

கலாநிதி . பரமு . புஷ்பரட்ணம்

**தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டையகால மதமும், கலையும்**

2002 குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை
ISBN 955942925 - 6 பக்கங்கள்:xviii + 177

திறனாய்வு: பாக்கியநாதன் அகிலன்




"இறந்த காலத்திற்குரிய (வரலாற்றுச்) சான்றாதாரங்களை வரலாற்றாசிரியன் ஒருவன் கையாளும் போது எப்போதும் அவன் தனது சொந்த சமகாலச் சூழலினாற் தாக்கம் அடைகிறான்...."

- றோமிலா தாப்பர் : 1994

**(Interpreting early India)**

இறந்த காலத்திற்கும், நிகழ் காலத்திற்கும் இடையிலான முடிவற்ற உரையாடல்களால் வரலாறுகள் கட்டப்படுகின்றன. இந்த முடிவற்ற உரையாடல்கள் வரலாறு என்ற ஒருமைப் (singular) பிரையோகத்தை விட வும், வரலாறுகள் என்ற பன்மைப் (plural) பிரையோகத்தையே அதிகம் தர்க்கபூர்வமானதாக்குகின்றன. அதாவது வரலாற்று ஆசிரியர்களது நோக்குநிலை வேறுபாடுகள் வரலாற்றைப் பன்மை நிலைப்படுத்துகின்றன. பாலசுப்பிரமணியம் முதல் பேட்டின் ஸ்ரெயின் வரையிலான வரலாற்றாசிரியர்களது பார்வை வேறுபாடுகள் சோழர்கள் பற்றிய பல வரலாற்று நூல்களைத் தந்திருக்கின்றன.

வரலாறுகள் பொதுவாகக் கடந்தகாலச் சம்பவங்களினது தொகுப்பாகப் பார்க்கப்பட்டாலும் - நடைமுறையில் வரலாறென்பது சம்பவங்களின் தொகுப்பாக மட்டுமின்றி, சம்பவங்களின் அழிப்பாகவும் தொழிற்படுவதனை அவதானிக்க முடியும். இந்த சம்பவங்களின் தொகுப்புகளுக்கும் - அழிப்புகளுக்கும் பின்னால் வரலாற்றா சிரியர்களின் கருத்து நிலைகள் தொழிற்படுகின்றன. இதனால், வரலாறென்பது ஒரு கருத்துநிலைச் சட்டகமாகக் காணப்படுகிறது.

இந்தப் பின்னணியிலிருந்து வரலாற்று எழுத்துக்களை நோக்கினால், அவை அதிகபட்சம் பக்கச் சார்புகளாலும், முற்கற்பி தங்களாலும் (bias and prejudice) இடையீடு செய்யப்படுவதனை அவதானிக்க முடியும். இவற்றால் வரலாற்றாய்வின் முக்கிய நிபந்தனை யாகக் கூறப்படும் புறவயப்பாடு (objectivity) என்பது ஆபத்துக்குள் ளாகிறது. வரலாறுகள் பற்றிய வரலாற்றாய்வுகள் (history of historiography) இந்த ஆபத்தை முன்னுணர்த்தியபடியேதான் உள்ளன.

இந்தவகையில் வரலாறு பற்றிய வரலாற்றாய்வுகள், வரலாற்று எழுத்தியலின் செல்நெறிகளையும் அதன் சமூகவியலையும் (sociology of history) வாசிக்க அதிகபட்சம் உதவுகின்றன. வரலாற்றாய்வுகள் போலவே, வரலாற்று ஆய்வுகளின் சமூகவியலை வாசித்தலும் வரலாறு என்ற அறிவுத்துறையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. குறிப்பாக பல்லின சமூகபண்பாட்டு இருப்புடைய எமது சமூகங்களைப் பொறுத்த வரை இது மிகவும் இன்றியமையாத ஒன்றாகவும் காணப்படுகின்றது.

காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த இலங்கை, இந்தியா முதலிய நாடுகளைப் பொறுத்தவரை நவீன வரலாற்று எழுத்தியலின் முன்னோடிகளாக காலனிய ஆதிக்கவாதிகளே இருந்துள்ளனர். உண்மையில் அவர்களது வரலாற்றாய்வின் மையக்கருத்துநிலை பேரரசின் தேவைகள் சம்மந்தப்பட்டதாக - அதனை விஸ்தரிக்கும் ஒன்றாகவே அடிப்படையிற் காணப்பட்டது. பிருத்தானிய பேரரசுவாதத்தின் பிரதான அரசியல் உத்தியாகக் கூறப்படும் 'பிரித்தாளும் தந்திரம்' என்ற பொறிநுட்பம், அவர்களது வரலாற்று எழுத்துக்களிலும் பிரதிபலிக்கவே செய்தது. இன மாதிரி எதிரிடைகளை (racial bypolars) வரலாற்றில் பிரையோகித்தலும் - குறிப்பிட்ட ஒரு

இனத்திற்கு முன்னுரிமை வழங்குதலும் அதன் செயல்நுட்பமாக இருந்தது. அவர்களது 'ஆரிய மேன்மைவத எண்ணக்கரு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படலாம். இந்த வரலாற்று எழுத்து முறை மிக முக்கியமாகப் 'பண்பாட்டுப் பிறத்தியார்களை' (cultural Others) உருவாக்கியது. இது ஒரு வகையில் வரலாற்றிற்கும் - அதிகாரத்திற்கும் (power) இடையிலான இடைத்தொடர்பு சம்மந்தப்பட்டது.

இலங்கையின் அதிகாரபூர்வமான மையநீரோட்ட ஜனரஞ்சக வரலாற்று எழுத்துக்கள் பெருமளவுக்குக் காலனியகால வரலாற்று மாதிரியையே (model) அதிகம் பின்பற்றிக் கொண்டவை. சிங்கள சமூகத்தை ஆரியவம்சப் பாரம்பரியத்துடன் இணைத்துக் கொண்டவை யாகவும், சிங்களவர் x தமிழர் என்ற இனமாதிரி எதிரிடைகளை வரலாற்று எழுத்துக்களில் பிரதானமாகப் பயன்படுத்திக் கொள்வன வாகவும் உள்ளன. இவ்வெழுத்துக்கள் பலவும் ஈழத்தமிழர்களை இலங்கை வரலாற்றின் பிரதான பண்பாட்டுப் பிறத்தியார்கள் ஆக்கியுள்ளன.

இதனூடாக இலங்கை வரலாறென்பது சிங்கள - பௌத்த வரலாறாக மட்டும் சட்டகமிடப்பட்டது. இலங்கைத் தீவு பௌத்தர்களுக்கு (சிங்களவர் களுக்கு) மட்டுமே உரிய தீவாக புத்தபிரானால் தெரிந்தெடுக்கப்பட்டது என்ற தொன்மத்தைச் (myth) சுற்றி இது கட்டப்பட்டது. தமிழர்கள் இலங்கைக்கு அந்நியர்களாகவும் - படையெடுப்பாளர்களாகவும் மட்டுமே சித்திரிக்கப்பட்டனர். இலங்கை வரலாற்றின் பெரும்பாலான தடையப் பொருட்கள் பக்கச்சார்புடனோ அல்லது முற்கற்பிதத்துடனோ, மேற்படி தொன்மத்தின் மீது ஒட்டப்பட்டு வரலாறு விரித்தெழுதப்பட்டது. இதனூடாக இலங்கையின் மையநீரோட்ட வரலாறென்பது ஒரு சிங்கள - பௌத்தப் பெருங்கதையாடலாக வளர்த்தெடுக்கப்பட்டது. சிங்கள தேசம் என்பதற்கான கருத்துநிலை அடித்தளத்தை இது வழங்கியது.

மேற்படி சிங்கள - பௌத்தக் கதையாடல், எப்படிக் காலனியகால வரலாற்று முறையிலிருந்தும், முடிவுகளிலிருந்தும் தமக்குச் சாதகமானவற்றை உருவியெடுத்து தன்னைக் கட்டமைத்துக் கொண்டதோ, அதுபோலவே சிங்கள - பௌத்தக் கதையாடலிலிருந்து தமக்குச் சாதகமானவற்றை உருவியெடுத்து தமிழ் ஜனரஞ்ச வரலாற்று எழுத்துத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டது. அடிப்படையில் வேறுபட்டன போலத் தோன்றினாலும், பொதுவாக இம்மூன்று

எழுத்துக்களும் தத்தமது பெருமைகளை விதந்துரைத்தலேயே அடிப்படை நோக்கமாகக் கொண்டவை.

மேற்படி சிங்கள, தமிழ் ஜனரஞ்சக வரலாற்று எழுத்துக்கள் பண்டைய இலங்கையில் இந்தியாவின் குறிப்பாகத் தென்னிந்தியாவின் வரலாற்று வகிப்பாகத்தை சரியான வகையில் இனங்காணமல் தவிர்த்துக் கொள்ளும் ஒருவகையான அடையாள அரசியலை மேற்கொள்வதையும் பொதுப்படையாக அவதானிக்கமுடிகிறது.

இவ்விதமான எழுத்துமுறைகளுக்கான மாற்று (alternative) எழுத்துமுறைகளை ஸ்தாபிக்கவேண்டிய அறிவுசார் தேவை வலிமையாகவுள்ள ஒரு சூழல் நிலவும் காலகட்டத்தில் கலாநிதி பரமு. புஷ்பரட்ணத்தின் 'தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரது பண்டைய கால மதமும், கலையும்' என்ற நூல் வெளிவந்திருக்கிறது.

இந்நூல் நான்கு கட்டுரைகளின் தொகுப்பாக அமைகிறது. அதன் முதலாமியல் - 'ஈழத்தமிழர்களின் பழமையும், பெருமையும்' என்ற தலைப்பிலும், இரண்டாமியல் - 'ஈழத்தமிழரின் கலைமரபு' என்ற தலைப்பிலும், மூன்றாமியல் - 'ஈழத்தமிழரின் சைவ, வைஷ்ணவ மதங்கள்' என்ற தலைப்பிலும், நான்காமியல் - 'ஈழதத்தமிழரும் பௌத்த சமண மதங்களும்' என்ற தலைப்பிலும் அமைந்துள்ளன. பெருமளவுக்கு கல்வெட்டுக்கள், நாணயங்கள் முதலிய தொல்லியற் தடையப் பொருட்களுக்கு ஊடாக இவற்றை நூலாசிரியர் எழுத முற்பட்டுள்ளார். அவரது முதலாவது இயல் ஈழத்தமிழர்களது வரலாற்றுத் தொன்மையையும், தனித்துவத்தையும் எடுத்துக்காட்ட முயலுகிறது. ஒருவகையில் ஏனைய கட்டுரைகளுக்கான அடித்தளமொன்றை இதனூடாக உருவாக்க நூலாசிரியர் முயன்றுள்ளார். ஏனைய கட்டுரைகள் கலை, மதம் முதலிய வெவ்வேறு விடையங்கள் பற்றியதாக இருந்த போதிலும், அவரது மொழிகொண்டு கூறுவதானால் 'ஈழத்தமிழரது பழமையும், பெருமையும்' என்பதைக் காணவிழைதலே அவற்றின் சாராம்சமாக உள்ளது.

அவரெடுத்துக் காட்டும் தொல்லியற் சான்றுகளூடாக - குறிப்பாகத் தென்னிலங்கை சார்ந்தவற்றினூடாக (இவற்றோடு ஒப்பிடுமளவிற்கு இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பரவலானதும், உறுதியானதுமான தொல்லியல் ஆய்வுகள் நடைபெறவில்லை) நோக்கும் போதும், அது தவிர்ந்த பண்பாடொன்றின்

வரலாற்றை வாசிக்க உதவக்கூடிய - ஆனால், பாரம்பரியமாக வரலாற்று வாசிப்பிற்கான சான்றாதாரங்களாக எமது வரலாற்று வாசிப்பு வட்டகையில் அதிகம் எடுத்துக் கொள்ளப்படாத மொழியியல், தொழில்நுட்பங்கள், கைவினைப் பாரம்பரியங்கள், காண்பிய, ஆற்றுகைக் கலை மரபுகள், ஆடையணி கலன்கள், மதம் மற்றும் சடங்குகள் முதலியவற்றை அவற்றின் இயக்கத்தின் அனைத்து பண்பாட்டு மட்டங்களினூடாக இன்று வரை 'அகழ்வு' செய்து நோக்கும் போதும் ஒரு தமிழ், சிங்கள - இன்னும் விரிவான அர்த்தத்தில் இந்திய - தென்கிழக்காசிய பண்பாட்டுக் கலப்பிணைவு (Cultural fusion) என்ற பண்பே இலங்கை பற்றிய சமூகபண்பாட்டு வரலாற்று வாசிப்புக்களூடாகத் தூக்கலாகத் தெரிகிறது. பண்பாட்டுப்பரவல்களும் (cultural diffusion), பண்பாட்டுப் பேற்றின் (acculturation) பல்வேறு பண்புகளும் இந்தக் கலப்பிணைப்பினைப் பிரதானமாகச் சாத்தியமாக்கியுள்ளன எனக் கூற முடியும். இந்தக் கலப்பிணைவுக்கு நூலாசிரியர்குறிப்பிடுவதுபோல

" ஒரு மதம் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது மொழி பேசிய மக்களுக்கு உரிய மதங்களாக இல்லாது பல இன - மொழி பேசிய மக்களுக்கும் உரிய மதங்களாக ஆதியில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன."

(பக்கம் :25)

என்பது முதல் தென்னிலங்கையுள் தெரியவரும் தமிழ் அரசர்கள் அல்லது அரசுகள் மற்றும் தமிழ், சிங்கள மக்களின் பொது மூதாதையர் தென்னிந்திய பெருங்கற்கால மக்களாக இருத்தல் மற்றும் பண்பாடுகளின் இயங்கியல் வரையிலான பல்வேறு காரணங்கள் இருக்கமுடியும்.

விரித்துப் பேசுவதானால் குறிப்பிட்ட இரு சமூகங்களும் - அவற்றின் பண்பாட்டியல்புகள், பிற பண்பாட்டுத் தொடர்புகள், அவர்கள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தி நின்ற பிரதேசங்கள், காலம், மத பண்பாட்டு அரசியல், பொருளாதாரநிலை, அவர்களது அதிகாரவலிமை முதலிய பல்வேறு காரணிகளைப் பொறுத்து, இந்தக்கலப்பிணைப்பினுள் குறிப்பிட்ட சமூகங்களின் செல்வாக்கு என்பது விகிதாசார ரீதியாக - வெவ்வேறு காலகட்டங்களில் கூடிக் குறைந்திருக்கலாம். ஆனால், கலப்பிணைப்பு என்ற குணாம்சம் பிரதானமாக இருந்துள்ளது என்றே கூறவேண்டும். இந்த நோக்கில்

இலங்கை வரலாறு திறக்கப்படும் பட்சத்தில் - இலங்கை என்பது (குறிப்பாகத் தென்னிலங்கை - ஏனெனில், வடகிழக்குப் பகுதிகள் பற்றி தொகுத்துப் பேசக் கூடிய அளவிற்கு போதிய ஆய்வுகள் இன்னும் நடைபெறாத நிலையில்) தமிழர்கள், சிங்களவர்கள் என்ற இரு மொழிக்குழுவினராலும் காலந்தோறும் அவரரவது பண்பாட்டு - வரலாற்று அரசியல் நிலைமைகளின் பகைப்புலத்தில் நெய்யப்பட்டிருப்பதனை எடுத்துக் காட்ட முடியும் போலத் தோன்றுகிறது.

இந்தக் கலப்பிணைவின் இயல்புகளை சுட்டிப்பாகப் புரிந்து கொள்வதற்கு, உதாரணமாக கலையின் உற்பத்தி நடவடிக்கைகளில் முக்கியபங்காற்றும் போஷிப்பு (patronage) என்றவொரு விடயத்தை எடுத்துக்கொண்டால், போஷகர்கள் பௌத்தர்களாகவும், சிங்களவர்களாகவும் இருக்கும் போது, கலைஞர்கள் தமிழர்களாக அல்லது தென்னிந்தியராக இருக்கும்பட்சத்தில் போஷகரது தேவையும், பின்னணியும், கலைஞர்களது கலைவெளிப்பாட்டிற்கான அவர்களது பண்பாட்டு மரபுகளுடன் இணைந்து முற்றுமுழுதாக போஷகர்களது பண்பாட்டிற்குரிய 'வழமையான' வடிவமாகவோ அல்லது கலைஞர்களது 'பாரம்பரியமான' வெளிப்பாட்டு வடிவம் சார்ந்ததாகவோ அதிகபட்சம் இருக்காது, அவ்விரண்டையும் செரித்துக் கொண்ட ஒரு கலப்பு (hybrid) வடிவமாக தோற்றம் பெறுவதனை அவதானிக்க முடியும். கம்பளைக் காலத்திற்குரியதாக இனங்காணப்படும் கடலாதெனி, லங்காதிலக முதலிய பௌத்தக் கட்டடங்களில் இந்தக் கலப்பிணைப்பின் காரணமான கலப்புப் பாணியினுருவாக்கத்தை (hybrid style) அவதானிக்க முடிகிறது. இவற்றைச் சிங்களவர்களது 'பாரம்பரியமான' பாணி சம்பந்தப்பட்டது என்றோ அல்லது அதன் உருவாக்கத்தில் தமிழ்ஸ்தபதிகளும், திராவிடக்கட்டடக்கலை என அறியப்பட்டமரபும் சம்பந்தப்பட்டிருப்பதால் திராவிடப்பாணி என்றோ பெயரிட முடியாது. அவ்விரண்டின் கூட்டாகவுருவாகிய ஒரு புதியகலப்புப்பாணியே உண்மையில் அங்குகாணப்படுகிறது. இவ்விதமான கலப்பியல்பு (hybrid nature) இலங்கைப்பண்பாட்டின் பல்வேறு கூறுகளிலும் அவதானிக் கப்படக்கூடியது. இது சூசகமாக இந்தக் கலப்பிணைப்பிற்கான வரலாற்றுப் பகைப்புலத்தையும் காட்டி நிற்கிறது.

'பூநகரி - தொல்பொருளாய்வு' (1993), 'வடஇலங்கையில் சிங்கைநகர்' (1991), 'தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு' (2000), 'பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும்' (2001), 'இலங்கைத்

தமிழரின் பண்டையகால நாணயங்கள்' (௨௦௦௧), 'Ancient coins of Sri lankan Tamils' (௨௦௦௨) முதலிய நூல்களையும், பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ள மேற்படி நூலின் ஆசிரியர் கலாநிதி பரமு. புஷ்பரட்ணமவர்கள் இன்றைய வரலாற்று ஆய்வாளர்களிடையே துடிப்பும், கடின உழைப்புமுடைய ஒரு முயற்சியாளராவர். இலங்கையின் வரலாற்றுக்கும், தமிழர்களது வரலாற்றுக்கும் புதிய தரிசனங்களை தரக்கூடிய கலாநிதி பரமு. புஷ்பரட்ணம் அவர்களது நூலின் ஆசியுரைப்பகுதியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் எடுத்துக்கூறிய சில கருத்துக்களைக் கீழே இணைப்பதுடன் இக்கட்டுரையை முடித்துக் கொள்ளலாம்.

“ ........ அவரது ஆய்வும், ஆய்வுப் பரப்பும் அவரை இலங்கை வரலாற்றாய்வின் மையப்புள்ளிக்குக் கொண்டு செல்லல் வேண்டும் என்பதே எனது விருப்பம், இதனை ஈட்டுவதற்கு அவர் தனது ஆய்வினை இன, மொழி கடந்த இலங்கையின் பண்டைய வரலாற்றாய்வாளர்களில் ஒருவராக நின்று அந்நிலை வழிவரும் நன்மதிப்பைப் பெற்று தமது ஆய்வினைமேற்கொண்டு செல்லல் வேண்டும் என்பதே எனது விருப்பம் ..... அறிவுத்துறை நூல்களை வாசிக்கும் பொழுது அவை தரும் தரவுகள் அளவு அல்லது அந்த அளவுக்கு மேல் முக்கியமானது அவை வாசிப்பவர் மனதிலே கிளப்புகின்ற விளாக்களும், தூண்டல்களும் ஆகும். புஷ்பரட்ணத்தின் எதிர்கால ஆய்வுகள் இவற்றை நிறைவு செய்வதாக .....”.